
உ

விநாயகர் துணை

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ:



அமரர்

# வடிவேலு சண்முகலிங்கம்

அவர்களின்

## நினைவு வெளியீடு

22.11.2013

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



யாழ்ப்பாணம், திருநெல்வேலி – பத்திரகாளி கோவிலடியைப்
பிறப்பிடமாகவும், வவுனியாவைத் தற்காலிக
வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த

ஆச்சாரியார்

# அமரர் வடிவேலு சண்முகலிங்கம்

(முன்னாள் நல்லூர் கிராம சபை உறுப்பினரும்
சுன்னாக ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன தொழிற்சங்க
காரியதரிசியும்.)
அவர்களின்

நினைவாக மலரும்

# வரலாற்றுச் சுவடு

22.11.2013



# சமர்ப்பணம்

எங்களின் வாழ்க்கையின் ஆலவிருட்சத்தையும்

விழுதுகளையும் பாசக்கயிற்றால்

பேணிப் பாதுகாத்து

அண்ட சராசரங்கள் அனைத்தையும் காத்தும்

அழித்தும் திருநடம் செய்து நிற்கும் விகர்மப்

பிரம் மேசன் திருவடிகளைச் சேர்ந்த

எங்கள் ஆலமரமான

விஸ்வம் பிரம்ம ஸ்ரீ

வடிவேலு சண்முகலிங்கம் (ஆச்சாரியார்)

(முன்னாள் நல்லூர் கிராம சபை உறுப்பினரும்,

சுன்னாக ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபன தொழிற்சங்கக் காரியதரிசியும்

எங்கள் பாசக் கோயிலின் அச்சாணியாகவும்.

குடும்ப விளக்காவும், ஒளி வீசி மறைந்த

எம் அன்புத் தெய்வத்தின் மலர் பாதத்திற்கு இன் நினைவேட்டினை

சமர்ப்பணம் செய்கின்றோம்

இங்ஙனம்
குடும்பத்தினர்

உ

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



தோற்றம்
12.04.1926

அமரர்

மறைவு
23.10.2013

# வடிவேலு சண்முகலிங்கம்

அவர்கள்

திதி நிர்ணய வெண்பா

நீண்டபுகழ் விஜயவாண்டு துலைத்திங்கள் ஆறதிலே
பூண்ட அபரபக்க சதுர்த்தி திதியதுவே - எம்மண்ணல்
மாண்டபுகழ் சண்முகலிங்க வள்ளல் - பரம் பொருளின்
காண்டரிய தாள் அடைந்தார் என்றேகுறி.

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பண் - மேகரஞ்சினி - (நீலாம்பரி)

ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடும்
குணமுடையோன் குளிரும் கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு
சிவந்த வண்டு
வேறாய உருவாக்கிச் செவ்வழி நற்
பண்பாடும் மிழலையாமே

(சம்பந்தர்)

பண் – காந்தாரம் ( நவரோஜி)

கைப்போதம் மலர் தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்து தொழ நின்ற முதல்வனை
அப்போதும் மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே
( நாவுக்கரசர்)

பண் – நட்டபாடை ( கம்பீரநாட்டை)

நத்தார்படை ஞானன்பசு ஏறின்னனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பணிவான் திருக்கேதீச்சரத்தானே
(சம்பந்தர்)

பண் – தக்கேசி ( காம்போஜி)

வானநாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப்பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டுகந்தானே
தேவனே திருவாடுதுனையுள்
ஆனையே எனை அஞ்சலென்று அருளாய்
ஆர் எனக்குறவு அமரர்கள் எறே
( சுந்தரர்)

## திருவாசகம்

எண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப் பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனை யாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந் தாமரைத்தாடனையே மேனிக
தனிச்சுடரே யிரண்டு மிலித் தனியனேற்கே

( மணிவாசகர்)

## திருவிசைப்பா

பண் – பஞ்சமம்

நீறணி பவளக் குன்றமே நின்றே
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணிபுவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய்யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

(திருமாணிகைத்தேவர்)

## திருப்பல்லாண்டு

பண் – பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித் தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறுநெறி சேராமை
வில்லாண்ட கனகத் திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

(சேந்தனார்)

## திருமந்திரம்

யாவர்க்கும் மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கும் மாம் பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கும் மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் மாம் பிறர்க் கின்னுரை தானே

( திருமூலர்)

## திருமுருகாற்றுப்படை

குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்தவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன் கைவேல்.

( நக்கீரர்)

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேதமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

(பெரிய புராணம்)

மதியோங்கு பிரமாதியைவரவர் சக்தியொடு மகிழ்விற்றோன்றி
பதியோங்கு தன்றிருமுன் படைப்பாதி யைந்தொழிலும்
பணியினாற்றர்
விதியோங்கு தூயவருட் சக்தியோடைந் தானமும் விளங்க
நாளும்
துதியோங்கு கருணைபுரி விச்சுவநாயகன் சரணந்தொழுது
வாழ்வோம்

(விஸ்வப்பிரம்மபுராணம்)

## திருப்புகழ்

அகரமுமாகி யதிபனுமாகி யதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர்மேலாய்
இகரமுகமாகி யெவைகளுமாகி யினிமையுமாகி வருவோனே
இருநில மீதி(ல்) எளியேனும் வாழ எனது முனோடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடனருளிய பூசை மகிழ் கதிர் காமமுடையோனே
செகண சேகு தகுதிமி தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவும் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
ஐம்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

# அமரர்
# விஸ்வப்பிரம்மஸ்ரீ வடிவேலு சண்முகலிங்கம் ஆச்சாரியாரின் வாழ்க்கைத் தடப்பதிவுகள்

சூரியனிலிருந்து பிரிந்து அனேக காலம் அனலாகக் கனன்று கொதித்த பின் நிலவுலகு; குளிர்ச்சியடைந்து, கல்லாகி, மண்ணாகி உயிரினங்கள் வாழும் நிலைக்குக் கனிந்தபோது, உயிர்க் கூட்டங்கள் தோன்றி வாழ்ந்த பெருநிலப்பரப்பு லெமூரியாக் கண்டம் (Lemuria Continent) எனப்படும் தென்நிலப்பரப்பாகும். இத்தென்நிலப்பரப்பே நாவலந்தீவு (ஜம்பூத்தீபம்) அந்நாவலந்தீவின் தென்பாகம் (தென்பாலிமுகம்) சமன் ஆண்ட பரப்பு. வடபாகம் சமுன்னை அல்லது ஈழம் ஆண்ட குமரிக்கண்டம் அல்லது ஈழம் என அழைக்கப்படும் (சமன், சமுன்னை ஆகிய இருவரும் ஆதிமனுச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள்.)

பல கடலூழி வாய்ப்பட்டு நாவலந்தீவு சிதைந்த பின்னர் எஞ்சிய ஈழநாட்டின் ஓர் சிறுபாகமே இன்றைய இலங்கைத்தீவு. இவ் இலங்கைத்தீவின் மகுடமென விளங்குவதும் வீணாகானபுரம், கந்தர் வகானநகரம் என பூர்வகாலத்தில் அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் நீர்வளமும் நிலவளமும் கலை வளமும் நிறைந்தவூர் திருநெல்வேலி. திருவும் தெய்வீகத் தன்மை பொருந்திய தலம், கழனிகள் நிறைந்த இடம் என்ற கருத்தமைந்தவூர் திருநெல்வேலி ஆகும்.

அத் திருநெல்வேலியின் நடுவண் சீமாவளவு - கம்மாலையடியில் "ஸ்தபதீஸ் ஸ்தாபக சைவ ஆச்சார்யோ விஸ்வகர்மணஸ் ஆச்சார்யோ விஸ்வகர்மாக்ச ஆதிப்பிரம்மு குலோத்பவ" என்று ஸ்காந்தபுராணம் கூறும் பிரம்ம வித்துகளான விஸ்வகர்மப்பிராம்மண மரபிலே தோன்றிய வர்தான் நாகர் என்ற

சீரியோன். அவரும் அவர்தம் இல்லக்கிழத்தியும் செய்த அருந்தவப்பயனால் அவர்களின் இளையகுமாரனாகத் தோன்றியவரே வடிவேலு. இவருக்குக் காளைப் பருவம் வந்துற்ற வேளை, பெற்றோர் அவ்வூர் அருவாளர் மரபுதித்த நன்னியரின் குமாரி மாணிக்கமும் அராலியூர் சபாபதியும் பெற்றெடுத்த மூத்த குமாரத்தி அழகமர் நங்கை இரத்தினத்தை வதுவாகக் கண்டு கடிமணம் புரிந்து மகிழ்ந்தனர்.

இவர்களின் இல்லற தர்மத்தின் பயனாய் முதல் முத்தென இராசம்மா தோன்ற அன்னவரைத் தொடர்ந்து மயில்வாகனம் என்ற ஆண்மகவு உதயமானது. அவருக்குப் பின்னவளாகச் சொர்ணம்மா என்ற திருமகளும் தோன்ற, இளைய திருக்குமாரனாகத் தோன்றிய ஆண்மகவுக்குச் சண்முகலிங்கம் என்ற திருநாமம் சூட்டி மகிழ் வெய்தினர்.

சண்முகலிங்கம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியு மாக வளர்ந்து வந்தார். கல்வி கேள்விகளில் சிறந்து வந்தார். அந்த வேளையில் இவரது ஏழு வயதில் தாயை இழந்தார். பாட்டி மாணிக்கமும் தமக்கை இராசம்மா அத்தான் இராசையா ஆகியோரின் அரவணைப்பில் மூன்று பிள்ளைகளும் வளர்ந்து வந்தனர்.

கல்வி கேள்வியில் சிறந்த சண்முகலிங்கம் இயவனத் தொழிலும் பயின்று சுண்ணாகம் ஒட்டுப் பலகைக் கூட்டுஸ்தாபனத்தில் தொழிலராகப் பணியாற்றி வந்தார். அந்த வேளையில் தாவளை இயற்றாளைப் பதியில் வாழ்ந்த கண்ணாளர் மரபில் வந்த வேலுப் பிள்ளை கனகம்மா தம்பதியரின் மூத்த குமாராத்தி நல்லம்மா எனும் அருங்குணவதியை மணமகள் எனக் கண்டு இவருக்கு மணவிழாக் கண்டனர். இவரது மைத்துனிகள் நேசம்மா, கண்மணி ஆகிய இருவரும் தம் கணவர்களுடன் சேர்ந்து இரண்டாவது பெற்றோர்களாக இருந்து நடாத்திவைத்தனர்.

சண்முகலிங்கம் மனைவியின் சகோதரர்களான இரத்தினேஸ்வரி, குலமணி, இராஜேஸ்வரி, முருகமூர்த்தி, மயில்வாகனம் ஆகியோரையும் சகோதரராகப், பிள்ளைகளாகவே பேணி வந்தார்.

சண்முகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் இல்லறம் எனும் நல்லறத்தின் பயனாய் 'மங்கலம் என்ப மனையாட்சி மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு' என்பதற்கு இணங்க மூத்த திருமகனாக வைகுந்த வாசன் தோன்றினார். அதைத் தொடர்ந்து இராஜபவானி மூத்த மகளாகத் தோன்றினார். பின்னவராக மனோகரவாசன், பத்மாவதி (வவி) என்ற அருங்குணவதி, நிர்மலா என்ற நங்கையைத் தொடர்ந்து, திரிபுரவாசன், தில்லைவாசன், சக்திவேல், சண்முகதாஸ் என்ற சிங்கங்கள் தோன்ற கடைக்குட்டியாக ஞானவேலும் தோன்றினார். பிள்ளைகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர் சண்முகலிங்கம் தம்பதியினர்.

இவ்விடத்தில் உற்றவரும், சுற்றத்தார் யாவருடனும் சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தார். சண்முகலிங்கம் முக்காலமும் இறைவழி பாட்டைச் செம்மையாகச் செய்வார். வீட்டிற்கு அருகே உள்ள காளி அம்பாள் ஆலயத்தைச் சுத்தம் செய்து, திருமஞ்சனமாட்டி விளக்கு வைத்து வழிபடுவதை எதை மறந்தாலும் அதை மறக்காது செய்துவந்தார். தந்தையாருடனும் மூத்த சகோதரர்களுடனும் சேர்ந்து செய்தத்தொடங்கிய இந்தப் பணியைப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளூடாகவும் செய்து வித்து வந்தார்.

சமூகப் பணியிலும் ஈடுபட்ட சண்முகலிங்கம் **1962, 1965** காலப்பகுதிகளில் நல்லூர் கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். சில காலம் பதில் தலைவராகவும் கடமையாற்றினார்.

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் இவரது முன்னோர்களின் வழிபடு தெய்வமாகவும், அரசர் காலத்திலேயே உரிமைக்கோயி

லாகவும் விளங்கி வந்தது. அந்த வகையில் அவ் ஆலயத்திற்குரிய யாசக வளந்தை இவர் முன்னோர்கள் எடுத்து வந்தனர். மூன்று வளந்தும் திருநெல்வேலியைப் பூர்வீகமாகக் கொண்டே விஸ்வகர்மப் பிராம்மண குடும்பத்தினர்களே செய்து வருகின்றனர். (ஒரு பகுதியாளர் அரியாலை) சண்முகலிங்கம் வளந்து உரிமையாளராக இருந்து அன்னையின் தொண்டை ஆற்றி வந்தார்.

திருநெல்வேலி பத்திரகாளி கோயிலில் அன்னையைப் போற்றிப் பாடிப்பரவி வந்தார். 9ஆம் திருவிழா உபயகாரர் குடும்பத்தைக் சேர்ந்த இவர் தனது மனைவியின் ஊரான தாவளை, இயற்றாளை, கல்வளை, விநாயகர், சிட்டிவேரம் கண்ணகை அம்மன், திருநெல்வேலி தலங்காவல் விநாயகர் என்று இறைபதம் பரவுவதை நியமமாகவே கொண்டிருந்தார்.

மூத்த மைந்தன் கல்விகற்றபின் வெளிநாடு சென்று தொழில் புரிந்து குடும்பத்தைக் காத்தபின் திடீரென கொடியநோய் வாய்ப்பட்டு மணமாலை சூடவேண்டிய வேளையில் பிணைமாலை சூடிய துன்பியல் நிகழ்வு சண்முகலிங்கத்தை வாட்டி வதைத்தது.

இராஜபவானி எனும் மூத்தமகளுக்கு சின்னர் தம்பதிகளின் புதல்வன் மாணிக்கவாசகரை மணாளனாக் கண்டு அவர்கள் வழியே சிவராஜ், நிருபராஜ், வித்தியா, இளங்கோவன், நந்தகோபன், சங்கீதன் ஆகிய செல்வப்பேரர்களைப் பெற்று மகிழ்ந்தார்.

பத்மாவதிக்கு வைத்தியலிங்கம் மாணிக்கம் தம்பதிகளின் புதல்வன் சத்தியபாலன் (இலங்கை வங்கி உத்தியோகத்தர்) வரனாகக்கண்டு, வதுவையாற்றி அவர்கள் வழியே அருட்பிரகாஷ், மிதுலாஜினி, கோபிநாத், மதனராஜ், யசோதரா என்ற பேரச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர்.

மகன் மனோகரவாசனுக்கு செல்லத்துரை தம்பதிகளின் திருமகளாம்

சீதாவை வதுவாகக் கண்டு மனவினை கண்டு; பிரசன்னா, துவாரகா, தர்சிகா என்ற பேரர்களைக் கண்டானந்தித்தார்.

நிர்மலாவுக்கு, கதிர்காமநாதன் தம்பதியினரின் குமாரன் கலாரஞ்சனை கடிமணம் கண்டு; டினோஜன், கௌசிகா, கம்சிகா, டிலக்ஷன், கஜலக்சன் ஆகிய பேரர்களைப் பெற்று ஆனந்தம் தந்தனர்.

திரிபுரவாசனுக்கு இராசதுரை தம்பதிகளின் மகளான குணேஸ்வரி என்ற மங்கையை மணம் கண்டு; யதுஷா, திவாகர், திருஷா, கபிஷா என நான்கு பேரர்களைக் கண்டு மகிழ்ந்திருந்தார்.

தில்லைவாசனுக்கு சோமசுந்தரம் தம்பதிகளின் மகளான கிருத்திகா என்ற திருமகளைத் திருமணம் செய்து; வாசிகா, கீர்த்சன் என்ற பேரக்குழந்தைகளைக் கண்டு பேருவுவகை கண்டார்.

சக்திவேல் என்ற மகனுக்கு ஞானசேகரம் தம்பதிகளின் புதல்வி கார்த்திகா என்ற கன்னியைக் கடிமணம் கண்டு திவ்யன், கிருஷ்திகா என்ற பேரர்களைக் கண்டு மகிழ்ந்தார்.

சண்முகதாசுக்குமகாலிங்கம் தம்பதிகளின் பாமினி என்ற திருமகளை மணம் கண்டு; நந்தீபா, வைகுந்தவாசன், வைஷ்ணவி, யசிபன் என்ற செல்வப் பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

ஞானவேல் என்ற இளைய திருமகனுக்கு சந்திரகாந்தன் தம்பதிகளின் அன்புப் புதல்வி பிருந்தா என்ற சுந்தர மகளை வதுவாகக் கண்டு மங்கல மன்றல் கண்டு அபினாஷ் என்ற அரும்பேரனைக் கண்டும் நேரே காணாமல் இருந்தார்.

பேத்தி மிதுலாஜினி திருச்செந்தூரனைத் திருமணம் கண்டு ஆரூசன் என்ற முதற்பூட்டனையும் கண்டு களிகொண்டார். பேத்தி வித்தியா, சாரங்கனை பானிக்கிரகணம் செய்து அவர்கள் வழியே

பூட்டப்பிள்ளையைக் காணும் சிந்தை கொண்டார். இந் நிலையில் ஹரிஸ் உதயமானார்

*1999* ஆம் ஆண்டு தன் காரியம் யாவினும் கைகொடுத்த துணைவியார் நல்லம்மா நோய்வாய்ப்பட்டு தேகவியோகமடைய மனம் தளர்ந்தார். நோயும் மெல்ல அவரைப் பற்றிக் கொண்டது.

இளைய மகள் நிர்மலாவும் வவுனியாவிட்டு வெளிநாடு செல்ல மீண்டும் தன் மூத்த மகள் பவானி, மருமகன் மாணிக்க வாசகர் பேரப்பிள்ளைகளோடு திருநெல்வேலியில் வசிக்கத் தொடங்கினார். அவர்கள் இவர் கண்ணை இமை காப்பது போல காத்து நிற்க; நோய் உக்கிரமடைந்தது.

மைந்தர்கள் அலைகடலுக்கு அப்பாலிருந்து வந்து தந்தையைப் பார்த்து தாபரித்தனர். உடல் நிலை சற்று சாந்தம் கொள்ள சாய்ந்தனர் தம் இருப்பிடம் மைந்தர்கள்.

*23.10.2013* ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆறாம் நாள் ரோகிணி நட்சத்திரம் நிறைவடையும் வேளையில் தேய்பிறை சதுர்த்தி திதியில் மக்கள், மருமக்கள், பேரர்கள் சோதரர்கள், மைத்துனர்கள், உற்றவர்கள் யாவரும் கதறியழ அன்னார் அகண்ட ஒளிப்பொருளான காயத்திரிதேவி சமேத விஸ்வகர்மப் பரமசிவனது பாதவிந்தங்களைச் சென்றடைந்தார்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

## தோற்றம்

பூதவுடல் தரித்தவுயிர்கள் எல்லாம்
பூண்டவுடல் கழற்றல் புதுமையல்ல - சரதம் தானே
ககனவுலகில் காதற்கடவுள் விண்டுவுக்கும்
கதைநியிது தான் என்பதை அறிவுளோர் அறைவர் அம்ம
நீண்லத்தில் உதித்த மைந்தன் நித்தியத்தை
அடைதல் நியதிதானே அவ்வகையில் சண்முகலிங்கனாரும்
அண்டம் கடந்த பொருள் அருகமர்ந்தார் என
அமைதி கொள்வோம் நாமே.

சுதந்திரமானவனாக இரு, எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே, நான் உறுதியாகச் சொல்வேன், உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப்பெற முயற்சி செய்ததையும் அப்படி எதுவும் வராமற் போனதையும் தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்தவையாகத்தான் இருக்கும்.

- சுவாமி விவேகானந்தர்

## ஐயா உங்கள் நினைவுகளில்

உங்களிடம் வரிகளில் பேசுகின்றோம்....
கேட்டிடாமல் சென்றிடாதிருங்கள்....
தென்றலாக வந்து எங்களை
தழுவிக் கொள்ளுங்கள்..
கதறுகின்றோம் ஐயனே...
கை நீட்டி உங்களை
அழைக்கின்றோம்...
என் மன அழுகுரல் உங்களுக்குக் கேட்கின்றதா?

கோழி கூவமுன்னரும், சூரியன் தன் கதிர்களை
விரிக்க முன்னரும், உங்களருகில்
நாங்கள் இருந்த ஞாபகத்தில் உறங்கி எழமுன்னரும்
எம் காதில் வந்து விழுந்த சேதி
உங்களது மறைவுச் செய்தியது...
எப்படித் தாங்க முடியுமா எம்மால்
ஐயனே சொல்லுங்கள் எப்படி முடியும் எம்மால்
காலனே என் இந்த ஓரக வஞ்சனை உனக்கு...

நொடி, நொடி காத்திருக்கின்றோம்
ஐயனே உங்களுக்காக...
கனவில் தரும் தரிசனங்கள எல்லாம்
நிஜத்தில் எங்கு சென்றுவிட்டன ஐயனே!!!
ஐயிரண்டு மாதங்கள் கருவினிலே தாய்
சுமந்தால், அது அவளது கடமை
ஆனால் நீ எங்களை உன்னது
இதயத்தில் சுமந்ததை நாம் எப்படி
மறப்பேன் ஐயனே...
மறக்கத்தான் முடியுமா எம்மால்
இந்த மானிடப்பிறவியில்..
எம் ஐயனே...

உன்னருகில் நாங்களிருந்தோம் ஐயனே...
உன்னுடன் நாங்களிருந்த இறுதி நாளிகையில்
எங்களை வழியனுப்பி வைத்து
ஈரேழு நாட்களித்து எம் மன வேதனை தெரிந்தும்
ஞானாமகனைப் பாராமலும்
இந்த ஜென்மத்தில் எம்மைத் தீராத சோகத்தில்
ஆழ்த்தி விட்டு சென்றீரே ஐயனே...

மீண்டும் ஒரு பிறவி எமக்காக
எடுத்திட வரம் கொடு காளிதாயே
அதுவும் எம் பிள்ளையாக வரும் வரம்
வேண்டும்... வேண்டும்... வேண்டும்
நாங்களும் உங்களுக்குத் தாலாட்டும் பாடல்
பாட வேண்டும் ஐயனே...
எம் மார்பிலும் மடியிலும் நீர்
துயில் கொள்ள வேண்டும்...
எம் ஆசைகள், கனவுகள் எல்லாம்
நிறை வேறிட வேண்டும்...
இறுதியில் உம்மடியில் எம் உயிர்
பிரிய வேண்டும் ஐயனே!

உங்களது செல்லக் கொழுந்துகள்
பவானி, மனோ, வவி,
நிர்மலா, திரியன்,
நில்லன், சக்தி, சர்மாஸ்,
ஞானா.

# பேரப்பிள்ளைகளின் இதயத்திலிருந்து....

உங்களை நாங்கள் நிஜத்திலும் படத்திலும், வீடியோவிலும்
பார்த்திருக்கின்றோம், மகிழ்ந்திருக்கின்றோம்...
உங்கள் குரல் கேட்டிருக்கின்றோம்
உங்களை நாங்கள் விரும்பியிருக்கின்றோம்
உங்கள் பிள்ளைகள் போல்...

உயிராக தெய்வமாக மனதில் நினைந்திருக்கின்றோம்
இன் நாட்களில் உங்களைப் பார்ப்பதற்கு வர எண்ணியுள்ளோம்
ஆனால் நீங்களோ எங்களை,
ஏமாற்றிவிட்டு போய்விட்டீர்கள்...
காலன் கொடியவன், வஞ்சகன், இரக்கமில்லா
அரக்கன், இரக்க மற்ற ஈனப் பிறவியவன்
இன்னும் பல சொல்லுருவம் கொடுக்க வல்லன...

எங்களுக்கு மட்டும் ஒளிகொடுத்த நீங்கள்
உலகிற்கே ஒளியாக மாறிவிட்டீர்கள்
எங்கள் அன்புறவே
வந்திடுங்கள் ஒருமுறை எங்களுக்காக...
எங்களுடன் சில அன்பு மொழி பேசிடுங்கள்
எங்களை மகிழ்விக்க வைத்து உங்களுடன்
அரவணைத்து பிஞ்சு வார்த்தை பல பேச
வந்திடுங்கள் ஒருமுறை எங்களிடம்

உங்களை எண்ணி உங்கள் செல்வங்கள்
உருக்குலைந்து போகின்றார்கள்
எம் உடலில் உயிர் உள்ளவரை
உங்களை நாம் மறவோம்

உங்களை நாம் மறவோம்
உங்களுக்காக என்றும் வேண்டி
உள்ளத்தில் நிதம் தொழும்
அன்பு உள்ளம் கொண்ட நாம்
ஆனாலும்
கோபம்..... பயங்கரக் கோபம்....
உங்கள் மேல்.....

எங்களை ஏமாற்றிவிட்டுப் போய்வீட்டீர்கள்
தணியாத கோபமிது
தணியாத பாயக கோபமிது....
மீண்டும் ஒருமுறை
காலன் கொடியவன், இரக்க மற்ற
ஓர வஞ்சகன், பாலகன் பிஞ்சு மன மறியாத
ஈனப் பிறவியவன்.....

**ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்**
**ஆசைப் பேரப்பிள்ளைகள்**

# என் மாமா! ஏன் இந்த ஓர வஞ்சனை

ஒருவட்டம் போட்டு
அதற்குள் வாழ நினைப்பதும்
தப்பில்லை ஆனால் அந்த
வட்டம் தான் வாழ்க்கை
என்று முடிப்பது தான் தப்பு....
மேற் கூறிய வரிகளிற்கு இணங்க வாழ்ந்தவரல்ல
எம்மாமனார்!!
புகழ் பூத்து நின்ற முழுநிலா எங்கள் மாமா!
அண்மைய நாட்களில் உங்களை
நோய் வந்து கருவுற்று இருக்கப் பிடித்தால்
படுக்கையில் நீராகாரம் அருந்தி
எங்களை வேதனைக்குள்ளாக்கி, சோகத்தில்
ஆழ்த்தி....
காலன் உங்கள் மேல் கொண்ட
பாசப் பிணைப்பின் நிமித்தம்
தன்வசமாக்கிக் கொண்டான்...
உங்கள் செல்வங்கள்
உங்கள் மேல் வைத்த பற்றால்
கடல் கடந்து ஓடோடி வந்தனர்
ஆனால் கதறினோம் கத்தினோம் ஆயினும்
நாங்கள் பட்ட வேதனைகள் சொல்லப்புரிபவையல்ல
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்
இனி அண்டத்தையும் ஆளும் பரம் பொருளின் திருப்பாதங்களில்
பேரானந்தமாய் வாழ ஆண்டவர் அருள்புரிவானாக!

உங்களது ஆத்மா
சாந்திக்காய் துதிக்கும்
மருமக்கள்

# கும்பாபிஷேகம் செய்ய உரித்துடையவர்கள் இரதகாரப் பிராம்மணர்கள்

12 ஆம் நூற்றாண்டில் , திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள திருமலை உய்யக் கொண்டான் தேவஸ்தானத்து கோபுரத்தின் கிழக்கு, வடக்குச் சுவர்களில் சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழனால் சதுர்வேதி மங்கலத்தில் கூடிய பட்டர்களின் முடிவு சாசனமாக வெட்டப்பட்டுள்ளது. அவை வருமாறு.

"கம்மாளர்கள் இரதகாரர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உப நயன சமஸ்காரத்திற்கும் பிரமோபதேசத்திற்கும் உரியவர்கள். இவர்கட்கு சிற்பம், வாகனவேலை, விக்கிரக நிர்மாணம், கோயில், கோபுரங்கட்டுதல், கும்பாபிஷேகம் செய்தல், விக்கிரகங்களுக்குக்கண்திறத்தல், யாககுண்டங்கள், பாத்திரங்கள் செய்தல் கிரீடங்கள், ஆபரணங்கள் செய்தலும் பிறவுமாம். அக்காலத்தில் விஸ்வகர்மப் பிராம்மணருக்கும் ஆருஷேய பார்பனர்கட்கும் ஏற்பட்ட விவாதத்தின் விளைவாய்த் தோன்றியது.

( ஆதாரம்: விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரிகாசிகை - இரத காரப் பிராம்மண விளக்கம்) பிரம்ம ஸ்ரீ . தெ.மு தெய்வசிகமாணி ஆச்சாரியார் F.R.S.A (London)

## எதிலும் வெல்ல.....

1. மிக அதிகமா உணவு உண்ணாதீர்கள்.
2. பட்டினி கிடக்காதீர்கள்.
3. அதிக நேரம் உறங்காதீர்கள்.
4. மிகக்குறைவாகவும் உறங்காதீர்கள்
5. பொறாமை கூடவே கூடாது
6. சந்தேகமும் சஞ்சலமும் எதிரிகள்; அவற்றைத் துரத்தி அடியுங்கள்
7. சோம்பலை ஒழித்துக் கட்டுங்கள்
8. பேராசை கொள்ளாதீர்கள்
9. நல்லவற்றை நினையுங்கள், நல்லவையே நடக்கும், நினைக்கும் பொருளாகவே ஆகும். நன்மை நம்மிடம் உண்டு என்பது சத்தியம்
10. மகிழ்ச்சியாக இருங்கள்
11. தைரியமாக இருங்கள்
12. பொறுமையும் விடாமுயற்சியும் நமது நல்ல நண்பர்கள், எப்போதும் இவற்றுடனேயே இணைந்திருக்கப் பழங்குகள்

**வெற்றி உறுதி, உறுதி, உறுதி**
**நிச்சயம் உறுதி**

**"தனி மனிதனின் நிலை உயர்த்தப்பட்டால்**
**தேசமும் உயர்வடைந்தே தீரும்"**

# அருந்தமிழ் மொழியும் ஐம்பெருங்கலையும் ஐஞ்சிவன் நெறியும் பிரபஞ்ச விஞ்ஞான நெறிப்பட்டதே

இன்று இலக்கியத்திற்கு இலக்கணம் அமைக்கப்பெறுகிறது. ஆனால் தமிழர்கள் இலக்கணம் கொண்டு இலக்கியம் கண்டவர்கள். ஒரே காலக்கூறுகளை, மாத்திரை அளவுகளை. தாளவளவுகளைக் கொண்டமைந்த இயல், இசை, நடனம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐம்பெருங்கலைகளை ஐங்கலை மரபு, ஐந்தமிழ் என்றனர் நம்முன்னோர்.

தமிழ்ப் பேரறிஞர்கள் "இற்றைக்குப் பதினைந்தாயிரம் வருடங்கட்கு முன்னரே தமிழ்ப்பல்கலைக்கழகங்களை நிறுவி தமிழ்க் கலைகள் யாவற்றையும் ஆய்ந்தனர் என்ற ஆய்வுக் கருத்துகள் உண்மையென இன்று கிடைக்கும் சான்றாதாரங்கள் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இந்து சமுத்திரத்தில் விரிந்து பரந்து கிடந்த தென்னிலப் பரப்பில் (லுமேரியாக் கண்டம்) குமரிக்கண்டம், தென்பாலிமுகம் (சமன் ஆண்ட நிலப்பகுதி) ஆகிய தமிழ்ப் பெரு நிலப்பரப்பின் இருப்பும் அங்கு ஒப்புயர்வற்ற நாகரிகமக்களாகத் தமிழ் மக்கள் வாழ்ந்த வரலாறும் உண்மையென பலவழிகளில் இன்று நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஆய்வர்கள் பழந்தமிழகத்தே வேதநூல், ஆகமநூல், இயல் , இசை, நடனம். சிற்பம், கட்டிடம், வேதியல், இயற்பியல், கணித நூல்கள் ஆய்ந்தறிந்து அறிவியல் சார்ந்ததாய் வெளியிடப்பட்டிருந்தன என்று கூறிய உண்மைகளில் தடயப் பொருட்களாக அவ் கலைத் தமிழ் நூல்களில் சில (TECHNICAL TAMIZH) இன்று வெளிப்பட்டு விளங்குகின்றன.

### கலைத்தமிழ் நூல்கள் வெளிப்பட்ட அற்புதநிகழ்வு

இதுவரை காலமும் நம் கலைநூல்கள் எல்லாம் வடமொழியில் இருக்கின்றன என்பதனால் தமிழுக்கு முந்திய மொழி சமஸ்கிருதமென்று சிலரும் அம்மொழியிலுள்ள கலைநூல்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று வேறு சிலரும் தம் அறிவுக்கெட்டியவரையும் மனம்போனவாறும் ஆய்வெனும் போர்வையில் அவலம்பித்து வந்தனர். ஆயினும் மரபு

வழிச்சிற்பியரும் வேறு விடயமறிந்த ஆய்வாளர்களும் இன்று சமஸ்கிருதத்திலுள்ள கலை நூல்கள் அனைத்தும் ஆதியில் தமிழிலேயே இருந்தன எனக் கூறிவந்தனர். 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிற்பக் கலைக் கல்லூரி அதிபர் மூதறிஞர் விஸ்வப்பிரம்மஸ்ரீ வை. கணபதிஸ்தபதி அவர்களை கருமாரிதாசர் அருட்கவி புலவர் வீப்த்திரனார் என்ற அறிஞர் பெருமகனார் அலுவல் நிமிர்த்தம் தற்செயலாகச் சந்தித்தார். அப்போதே மாபெரும் சிற்பியும் தமிழர்களின் மகாகவிஞன் (அஹம் ஸ்ரீ விஸ்வகர்மா வை தானவானாம் மகா கவிகி) என வேதவியாச ராலும் (மகாபாரதத்தில்) மயேந்திரமலையில் வாழும் மயன் எனும் நாமமுடைய விந்தைகள் பல செய்திட்ட மாயாவி என வால்மீக முனிவரால் இராமாயணத்திலும் புகழ்ந்துரைக்கப்பட்ட மயனால் இயற்றப்பட்ட 2 1/2 இலட்சம் பாடல்களைக் கொண்ட கலைத்தமிழ்நூல்கள் உள்ளிட்ட பத்து இலட்சம் பாடல்களை தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திலிருந்த தம் மாணவப்பருவத்தில் அப்பெருமகனார் மனனம் செய்து கொள்வாரின்றிச் சுமந்த அற்புதம் தெரிய வந்தது. அப்பாடல்கள் எளிமையும் அழகும் இனிமையும் சந்தமும் பொருந்திய அருந்தமிழ்ப்பாடல்களாக அமைந்திருந்த போதும், இயல், இசை, நடனம், சிற்பம், அணுவிஞ்ஞானம் / உயிரியல், மருத்துவம், வானியல், கணிதம் ஆகியவை விரவியும் கலைச்சொற்கள் மலிந்ததாயும் இருந்ததும் அவற்றை ஆய்ந்தறிந்து உய்த்துணரும் கொள்ளளவுயார்க்கும் குறைவாய் இருந்ததும் அந்நிலைக்குப் பெருங்காரணம் எனலாம்.

இவ் அற்புதம் அறிந்த Dr. வை. கணபதிஸ்தபதி அவர்கள அப்பாடல்களை தட்டச்சுச் செய்தும் அப்புலவர் பெருமகனார் விரைந்து பாட அப்பாடல்களை ஒலிப்பதிவு செய்தும் ஆவணப்படுத்தினார். விரைந்து செயற்பட்டு அப்போதைய தமிழகக்கல்வி அமைச்சர் திருமிகு Dr. அரங்கநாயகம் துணை கொண்டு முன்னாள் தமிழகமுதல்வர் பொன்மனச்செம்மல் M.G இராமச்சந்திரன் அவர்கள் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவிடும் நன்னாளில் (1986 சித்திரைப் புத்தாண்டு நன்னாள்) மயன் என்ற மாபெரும் சிற்பியின் பிரபஞ்ச விஞ்ஞான நூலும் ஐந்தமிழ் இலக்கணமும் "ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்" என தொல்காப்பிய பாயிரவுரையில் புலவர் பனம்பாரனார் குறிப்பிடுவதுமான ஐந்திறம் எனும் பழந்தமிழ் இலக்கணத்தை

அர்ப்பணம் செய்ய அரும்பணியாற்றினார். தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு வைசம்பாயனம் என்ற மயன் வரலாற்று நூலும் கணபதிஸ்தபதியின் வாஸ்து வேத ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

மேற்சொன்ன அற்புதத்தை வைசம்பாயனம்
அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத்திறன் விளங்கும்
பொற்றும் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல் காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே
(வை1212)

என முன்பே விளங்கியுள்ளதை உள்ளத்தே இருத்தத்தகுந்தது எனலாம்.

**தமிழ்ப்பேரறிஞன் மயனும் மனு எனும் நிலந்தருவேந்தனும்**

குமரிக்கண்டத்தில் பத்தாயிரம் வருடங்கட்கு முன்னர் மயன் எனும் பெருந்தச்சன் தோன்றியிருந்தான். இவன் தோன்றிய மரபே ஐந்தொழிலாளர்கள், விஸ்வகர்ம அந்தணர்கள் என்றும் நூல்கள் அறைகின்றன. மயன் தானியற்றிய பன்னிரு நூற்சாரம் என்ற நூலில் தன் தாய் பெயர் கருங்குழலி என்றும், தந்தை பெயர் திருமலர் என்றும் குறிப்பிடுகின்றார். இருக்கு வேத சுருதியில் மரீசி, அத்திரி, ஆங்கீரசர், புலத்தியர், காசிபர், இருது, பிருகு, தச்சர் (தக்கன்), குக்குரு ஆகிய நவப்பிரமாதிகளை விஸ்வகர்மப் பிராமணர்கள் எனக்குறிப்பிடுகிறது. "மயன் நவப்பிரமாதிகளில் ஒருவரான காசிபருக்கு திதிவயிற்றில் பிறந்த புத்திரன்; இவன் கின்னரன் தருகன், வினைஞன் என்றும் அழைக்கப்படுகின்றான்; இவன் அசுரருக்குத் தச்சன்; சிற்பசாத்திரம் செய்தவனும் இவனே எனத் தமிழ் அகாரதி கூறுகின்றது. திருமலர் என்ற இயற்பெயரை விட "கற்சிற்பர்" என்ற தொழில்சார் சிறப்புப் பெயர் வட மொழியில் "கஷ்சியப" எனத் திரிந்து வழங்கி பின்னாளில் வந்தோரால் வேர்ச் சொல் ஆய்வின்றி வடசொல் விதிக்கமைய காசிபர் எனத் தமிழாக்கம் செய்யப்பட்டது என்பதே சரியானது. இம்மயன் அண்டு சராசரத்தின் தோற்ற இயக்கத்திற்கு ஆதாரமான பொருள், செயல் ஆகியவற்றை ஆய்ந்தறிந்த விஞ்ஞானியாக விளங்கினான்.



கற்சிற்பர்

இவனை மகாபாரதத்தில் வியாசர் "அஹம் ஹி விஸ்வகர் மாவை தானாவானாம் மஹா கவிஹி" என்றார். அதாவது பிரபஞ்ச செயல் நுட்பம் தெரிந்த விஸ்வகர்ம்மாகவும் தானவர்களின் - தென்னவர்களின் கலைத்தமிழ் வல்ல மகாகவிஞனாகவும் விளங்குகின்றேன் என மயன் வாயிலாகவே காட்டுகின்றார். மயன் நாக அரச பரம்பரையின் தலைவனாகவும் விளங்கினான். (நாகர்கள் - மலைவாழ்நர் என்பதால் சாரல் நாட்டினர் - சேரர் எனப்பட்டனர்) இவன் முதற் தமிழ்க்கழகத்தின் தென்மதுரையில் ஐந்தமிழ் இலக்கணநூலான ஐந்திறம் உட்பட சிற்பமாகச் செந்நூல், ஓவியச் செந்நூல், மனைநிலச்செந்நூல், கணிதமாச் செந்நூல். வானியற் செந்நூல் பெருநடச்செந்நூல், ஏழிசைச்செந்நூல், விண்கலச்செந்நூல், மூலிகைச் செந்நூல், என்ற 12 செயல் நூல்களையும் (Tecnical Tamil) இன்னும் பல கலைநூல்களையும் அரங்கேற்றியுள்ளான். மயேந்திர மாமலையில் ஆலமரத்தின் கீழிலிருந்து பன்னிருவருக்கு அறமுறைத் தருளிய தென்னவனாகவும் விளங்கினான். பாகவதத்திலே வேதவியாசர் புராதன வேதம் என அழுத்திக் கூறும் தண்டமிழ் வேதமான பிரணவ வேதத்தையும் ஆகமநூலையும் (இன்றைய ஆகநூல்களின் எல்லாக் கலைக்கூறுகளையும் உள்ளடக்கியது) வெளியிட்டுள்ளான்.

இக் காலத்தில் பாண்டிய வேந்தனாகவும் தமிழ்கழகத் தலைவனாகவும் விளங்கியவன் மனு ஆகும். இவனை பாண்டியன் நெடியோன், நிலந்திரு திருவிற் பாண்டியன், திராவிட நாட்டரசன் சத்திய விரதன், சட்டமுனி எனப் பல பெயர்களால் வட, தென்மொழி நூல்கள் சுட்டுகின்றன. பாகவாதத்தில் திராவிட நாட்டரசன் சத்தியவிரதன், மனு என வேதவியாசர் சுட்டுவதைக் காண்க. இம் மன்னன் மயன் விஞ்ஞானக் கலைகளை வெளியிடவும் செயற்படுத்தவும் பல தேசங்கட்குச் சென்று பரப்பவும் ஆவன அனைத்தையும் செய்தான் என்பதை வைசம்பாயனம்.

நவமணி முடியணிந்து சிவராம் பொருளைப் போற்றி
சிவநெறி முழுதுணர்ந்து செந்தமிழ் வளர்க்கும் மேலோன்
சிவக்கலை சிற்பமோங்க தெருட்கலை ஆடல் ஓங்க
தவக்கலை நெறியுணர்ந்து தமிழ்க்கலை வளர்த்தானன்றே

(வை 655)

மயன்கலை விளங்குவதற்கு மாக்கடல் முல்லையூரில்
மயன் கலைக் கூடம்கண்டு மன்னனும காட்சிகண்டான்
மயன்கலைத் திறத்தையோர்ந்து நிலந்தரு திருவின்வேந்தன்
மயன்கலை வளர்வதற்கு வகுத்தனன் பலவும் செய்தான்
(வை 727)

என்று விளம்புகின்றது.

**அண்டத்திலும் பிண்டத்திலும் ஒரேவித ஆடல்**

மயன் எனும் மாபெரும் விஞ்ஞானி இவ் அகில சராசரத்தின் தோற்றம் மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்து நிலைகள், ஐந்தொழில்கள் மூலம் (பஞ்சகிருத்தியம் ) ஏற்படுவதாக ஆய்ந்தறிந்து வெளிப்படுத்தியுள்ளான்.

மூலமான ஒளிப்புள்ளி இடம் கொள்வதாகவும் அது தன்னை முடுக்கிச் சுழலத் தொடங்குகிறது. அச் சுழல் விசை காலம் எனப்படுகிறது. சுழல ஒளியணுக்கள் பல சிதறுகின்றன. சிதறிய ஒளியணுக்களைக கூட்டிணைக்க ஒழுங்கமைக்க, மூலம் ஓர் சீலத்தை (RHYTHUM) உருவாக்கி அவ்வணுக்களை கோலமாக்குகின்றனது. கோலங்கள் இணைந்தும் செறிந்தும் ஆகாய வெளியில் ஞாலமாகின்றது. இது மூலத்தின் காலமாவிசையால் நிகழும் ஐந்தியல் (பஞ்சகிருத்தியம்) எனப்படுகின்றது. (சிவசகத்தியின் ஐந்தொழில் என்க)

அணுக்களின் நுண்கூறுகளை (பரமா அணுக்களை) இன்றைய விஞ்ஞானிகள் புரோத்தன் (PROTON) நியூத்திரன் ( Neutorn) இலத்திரன்( Electron) என்கின்றனர். உலகின் முழுமுதல் விஞ்ஞானியான மாமுனிமயன் இவற்றை முறையே நேரணு, சீரணு, கூரணு எனக் குறித்ததுடன் அணுக்களின் கூட்டுறவாலேயே அண்டமும் பிண்டமும் ஆக்கப்பட்டுள்ளது என்பதையும் விளக்கியுள்ளான்.

அணுத்திரள் அணுக்கலை அணுக்கூர் ஆக்கம்
அணு அணு நேரணு கூரணு சீரணு
அணுக்கலையியலால் அண்டமும் ஆக்கும்
அணுக்கலையியலால் பிண்டமும் கூட்டும்
பருநிலை மூலம் பெருநெறி நோக்கி
ஒருநெறி உன்னி ஐங்கண் ஆக்கம்

கருநெறியியலாய் குய்யம் மேலாய்
பருநெறி யியலாய் ஐங்கண நிலையுறும்..."

எனக் (ஐந்திறம் 878) கூறுவதன் மூலம்,

அணுகதிர் இயக்கத்தில் சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், செவ்வூதா ஆகிய நிறக்கதிரலைகள் உண்டாவதை இன்றைய அணு விஞ்ஞானிகள் கூறுவதை உறுதி செய்து. அதனை ஒவியக்கலைக்கு இலக்கணம் கூறுமிடத்து வெள்ளொளி ஏழுநிறங்கள் என்பதையும் கதிரியல் ஐந்து நிறம் என்பதையும் விளக்கிப் பேசுகையில்;

ஓவியக்கலை தெரிமெய்நிலை வண்ணம்
ஒவியவனப்பும் எழிற்கலைமூலம்
கதிரொளி இலங்கும் எழுநிலை வண்ணமும்
கதிரியல் ஓங்கும் ஐவண நிலையும்

(ஐந்நிறம் 708) எனப் பகர்வதைகக் காண்க

இதனை வைசம்பாயனமும்

உலகுறும் பொருட்கள் கண்டு ஒளிபெற நிற்பக் கண்டு
நிலவுறும் வயங்கு தோற்றம் நெறிபெறும் அழகுகாட்டும்
நிலவுமை வண்ணமாக நின்றன்ன செம்மைமஞ்சள்
நவநீலம் பசுமைநல்ல கருமையும் ஐந்தே என்றார்

(வை 202)

என்பதால் தெளிவுபடுத்தப்படுகின்றது. நிற்க எமது ஆய்வுத் தளத்துக்கு மீண்டும் வருவோம். இன்றைய விஞ்ஞானம் நடுவிலே அணுவின் கருப்பகுதியில் புரோத்தனும் (நேரேற்றம்) - (Negative charghd energy) எதிரேற்ற சக்தித்தோற்றுவாயயும் நீயுத்திரனும் - ஏற்றம் சீரான ஆனால் நேரேற்றத்தோற்றுவாயும் (Positive Charghed Energy) நிறை செறிந்ததாய் விளங்குகிறது என்கின்றனர். இப்பகுதியை மயன் செறியணு என்றார். இது செவ்வொளி இதனைச் சுற்றி நீள்வட்டப்பதையில் பச்சை அல்லது நீல வொளியான இலத்திரன் ஒளியலை இயங்குகின்றது என்பர். அதனை மயன் சிற்றணு என்பார். இவ் கவசவொளியை தமிழில் மயன் சிற்றவையென்றும் சமஸ்கிருத்த்தில் கோசம் என்றும் பேசியுள்ளார். புரோத்தன், நீயூத்திரனை, நாம் ஆண், பெண் சக்திகள் எனலாம்.

இந்த ஞாலம் தோன்றுவதற்கு மூலமாய் ஒளிதான் விண்ணில் முகிழ்ந்தது என்று மயன் கண்டுணர்ந்தது. அதுவே ஒலியைத் தோற்றுவிக்கின்றது என்றும் கூறி முன்னையதை ஓம் ஒளி என்றும் பின்னையதை ஓம் ஒலி என்றும் ஓம் என்பது இரண்டு கிளைகளாக மூலம் ஒன்றிலிருந்து தோற்றம் கொள்கின்றன என்றும் உறுதிபடக் கூறியுள்ளான். அதனை அணுஒளி, அணு ஒலி எனவும் பேசியுள்ளான். ஓம், ஒளி, ஓம் ஒலி தத்துவத்தைத் தனது ஐந்திற முதற்பாவில் பிரம்மசூத்திரமாக - ஒளிநூலாக இதோ

"ஒளி முதற்கண்ட விண்ணொலி ஒசை
வெளிமொழி ஓமென விளம்பற்பாற்றே" என்றான்

இந்த ஓம் ஒளி அதில் பிறந்த ஓம் ஒலி என்ற முதற் பொருளானது தானியல் வடிவுபெற்று ஆகாயத்தில் பரவிக்கிடக்கும் அணுக்கள் சதுரவடிவில் விளங்குகின்றது என்றும்; அச் சதுர வடிவில் சக்திவாய்ந்த நடுப்புள்ளி ஒன்று இருக்கின்றது அந்தப் புள்ளியானது தனது துடிப்பினால் ஒளியாகவும் ஒலியாகவும் வெடித்தும் சிதறி பல சதுர அலைகளாக பிரபஞ்சம் முழுவதும் விரிந்து கிடக்கின்றது. இந்த நடுப்புள்ளி விண்கரு - பிரமபிந்து எனப்படுகிறது. ( விண் கருவுக்குள் உள்ள ஒளி ஒலிச்சக்தியே நவீன விஞ்ஞானம் கருச்சக்தி ( Neclerar Energy) என்கிறது. வெடித்துவரும் சதுர அலைகளை இலத்திரன் என்கிறது. அவ்ஒளியலையை சிற்றவை என்பார். மயன் ஆகாயத்தில் சதுர அலைகளானது விண்மண்ணாகும் நிலையில் இயல்புகள் ஒத்திருப்பினும் வடிவம் வட்டமாக மாறுகிறது எனச் சிற்பநூல்கள் கூறுகின்றன. இங்கு மயனின் தோற்றங்கள் ஐன்ஸ்ரீனின் $E=MC^2$ என்றதுடன் ஒத்துள்ளதை ஆய்வர்கள் விளக்குவர். இதனைப் பிரபஞ்ச வடிவான தேரில் விண்ணியல்ப்பகுதி (மேற்பாகம்) சதுர அமைப்பின் முப்பரிமாணத்தோற்றம் கொள்ள ( பிரமிட்டு, கோபுரம். தூபிபோல்) அடித்தளம் - மண்ணியலுக்குரிய வட்டவடிவு கொள்வதாக அமைக்கப்படுகின்றது.

ஒளிப்புள்ளியானது உணர்வுற்று கோடாகி சுழல வரியாகி, வடிவாகி, உருவாகிறது. அண்டத்திலும். எம் உள்ளமாகிய பிண்டத்திலும் ஒளியானது சீலத்தோடு ஓர் நெறி முறையில் இயங்கிறது. சீரான இயக்கத்தை ஆடல் என்கிறான் மயன். அதனுள் நடக்கும் அலை நடனத்தை உற்றறிந்து ஆடலான் உருவையும்

(ஒளிநடராசன்), சிற்றவையும் (சிற்றம்பலத்தையும்) கண்டான். எம் அகவிண்ணில் உள்ளத்தில் + பிண்டத்தில் நடப்பதே புறவிண்ணில் அண்டத்தில் பேரம்பலத்தில் நடப்பதாகக்கண்டு ஒளிவழிபாடு கண்டான் - அம்பலத்தலத்தையும் கண்டான். இதனை வைசம்பாயணம்

ஒளிவழிபாடு கண்டு ஒளிவழி பாடியியற்றி
ஒளிநெறி தன்னைக்காத்து ஒளிநெறி ஓங்கிநிற்க
வெளிஒளி திருத்தலத்தை விளங்குபொன் னவையேயாக
ஒளிநெறிக் காட்சி நல்கும் அம்பலத் தலத்தைகக்கண்டான்

(வை 582)

சிற்பமாக் கலை வகுத்த திருமயன் முதல்வகுத்த
பொற்புறும் உருவத்தோற்றம் புனிதமாம் எழிலின் தோற்றம்
கற்பனைக் கெட்டாத் தோற்றம் கருணையே வடிவத் தோற்றம்
அற்புதத் தோற்றங்கண்ட அருள் மயன் சிற்பமென்னே

(வை 634)

அவையினில் அம்பலத்தான் அருந்திரு உருவமைத்தோன்
அவையினில் நெறியமைத்து அருட்கலை வளர்த்த சீலன்
நவையறு கோட்டங்கண்டு நன்னிலை நெறியமைத்து
சிவமெலாம் செழிப்பதற்கு சிற்பமாமம் கலைவளர்த்தான்

(வை634) என்கிறது.

குமரிக்கண்டத்தின் ஓர்பகுதியாக விளங்கிய சிதம்பரத்தில் வெளி ஒளி திருத்தலத்தையும் ஆடலானுக்கு அமைத்தான்.

நான் முன்பு கூறிய தானியல் வடிவை SELF MANIFEST MATERIAL FROM என்று ஆங்கிலத்தில் கூறலாம். எனவே தானியலை Iness எனலாம். மூலவொளியும் மூலவொலியும் மாறுபாடுகளை தானாகவே எய்திக்கொண்டு இறுதியில் தன் இயல்பான வடிவத்தில் உருக்கொள்கிறது இதனை ஐந்திறம்

“அணுத்திறள் ஒலியே எழுத்தொலிச்சிறப்பாம்

வானியல் ஒலியே ஓசைமொழியாய்

தானியல் வடிவுறும் குறியெழுத்தென்ப" . என்று கூறும் மூலத்திலிருந்து காலவிசையால் பிறந்த ஓம் ஒலியில் உதித்த அ, இ, உ, எ, ஒ என்ற ஐங்குறிலின் மலர்ச்சியால் ஒளி, ஒலி வடிவ வளர்ச்சியால் எழுத்து சொல், பொருள், கட்டு, அணி என ஐந்தியல்புகளைக் கொண்டமைந்ததே அருந்தமிழ் என்றான் மயன்

எழுத்தே சொல்லே பொருள் கட்டணிஎன

வழுந்தும் ஐந்தியல் முறை நெறிவழக்கே

ஐந்தியல் மொழியாய் எண்ணிலை எழுத்தாய்

வந்ததொன்மரபே முந்து செந்தமிழாம்

(ஐந்திறம்)

**ஐம்பெருங்கலைகள் (ஐந்தமிழ்)**

மூலம், அண்டவெளியில் சிருஷ்டிக்குப் பயன்படுத்தும் காலக்கணக்கே ஐம்பெருங்கலைகளான இயல், இசை, நடனம், சிற்பம். கட்டிடம் ஆகியவற்றுக்கும் மாத்திரை அளவாகக் கொண்டு இலக்கணவகுத்தான்.

இயல், இசை, நடனம் ஒலிப்பு அளவு - மாத்திரை அளவு கொண்டு - தாளம் அளவு கொள்ளப்படுகிறது

சிற்பம் கட்டிடம் என்பவற்றுக்கு

எட்டு அணுத்தேர்த்துகள் - 1 இம்மி

8 இம் மி - 1 எள்

8 எள் - 1 நெல்

8 நெல் - 1 விரல்

6 விரல் - 1 தாளம் எனத் தாள அளவு வகுக்கப்படும் முகம் ஓர் தாளம் 8 தாளம் ஓர் மனித அளவு என்கிறது.

காலம் இடம் : உறுவதைக் கண்டோம் ( To Space Form Time)

ஐம்பெரும் கலைகளை இன்னோர் விதமாகவும் கூறுவார் இயல், இசை, நடனம், சிற்பம், நளினமாக்கலை என்பதே அது. இக்கலைகளை பேராலமரத்தின் கீழே மயன் சீடர்கள் அமர்ந்து உபதேசம் பெற்றதையும் கலைக்கூடத்தில் ஐம்பெருங்கலைகளை ஆய்வு செய்வதையும் வைசம்பாயனம்

ஆலமா மரத்தின் கீழே அருள்மயன் வீற்றிருக்க
சீலமார் சீடரெல்லாம் பன்னிரு நிலையமர்ந்தார்
மூலமாம் நாதநால்வர் வளர்சிற்பம் ஆய்ந்தாரன்றே
கோலமாய் நேயநல்வர் இல்முதல் நகரமாய்ந்தார்

(வை 144)

நாதன் ஆயன் மூலன்நூலன் நால்வராய் தமிழைத்தந்தார்
கீதன்போதன் வேதன் சீலனும் நால்வராய் சிற்பமாயிந்தார்
போதமார்மாயன் நேயன் வேலனும் நளினமாக் கலைகளாய்ந்தார்
வேதமாக கலையளித் வித்தெலாம் மூலமாய் விளங்கிற்ரன்றே

(வை 154)

தமிழ் (இயல், இசை, நடனம்), சிற்பம், நளினமாக் கலைகள் என இவ்வைந்தின் செயல்த்திறமைகளும் தாள அடிப்படையில் ஒரே மாதிரியாக விளங்குகின்றன. எனவே இக்கலைகளை ஐந்தமிழ் என்றனர். இவ்வைங்கலை மரபின்விரிவே எண்ணெகலைகளாகும் என்பார்.

**பிரணவேதம்**

விண்ணில் பரந்தும் செறிந்தும் காணப்படும் அணுக்களை ஒட்டவைக்கின்ற பொருள் யாது? இந்த இயங்கு பொருளை உயிர் என்றும் காலம் என்றும் சூடு என்றும் வேது என்றும் கூறலாம். இந்த மூலச்சூட்டுப் பொருளே அணுக்களை ஒட்டவைக்கின்றன. இதுமூலத்தில் ஏற்படும் சிருஷ்டி நிலை எனலாம். அணுச்சேர்க்கை சம்பந்தமான இயலை நாம் வேதியல் (Chemistry) என்கின்றோமல்லவா வேதுபிடித்தல் என்ற மருத்துவக்கலைச்சொல் சூடுபிடித்தல் எனப்பொருள்படும். இந்தச் சூடே உணர்வு எனச் சொல்லப்படுவதாயிற்று. இந்த உணர்வை (ஸ்மரணை) உள்ளடக்கிய

தத்துவம் தான் வேதம் ஆகும். இந்த மூலச் சூடுதான் பிரம்மம் எனப்படுகின்றது. இது தான் வைஸ்வானர அக்னி ( Cosmic Fire) எனப்படும். மயன் பிரணவச் சூடு என்பான். இந்த நிகழ்விற்கு மூலமாக ஒர் கணக்கியலும் உண்டு. மூலக்கணக்கைக் கையாண்டு சிற்புப்பயிற்சி பெற்றோர் செய்திடும் வடிவமைப்புக்கள் உயிர்ப் பொருட்கள் எனப்படும்.

இந்த உயிர்ப்புத்தான் சாந்நித்தியம் எனப்படும். இதனால் தானன்றோ சிற்பியானவர் (தியான சுலோகம்) நினைத்தமாத்திரத்தில் மூர்த்திக்கு 1/4 உயிரும் வடிவமைக்கும் போது 1/2உயிரும் கண் திறத்தலின் போது 3/4 உயிரும் அபிசேகத்தின் போது முழு உயிரும் வருகின்றது என சிற்ப சாத்திரம் ஐந்திறமதம் கூறுவதை உற்றறிக.

இம் மூல தத்துவத்தைப் பிரணவச் சூட்டின் அற்புதத்தை உணர்ந்த மாமுனி மயன் மாயேந்திர மலையில் இருந்து அதிவேதமான பிரணவ வேதத்தைச் செய்துள்ளான். அத்தமிழ் வேதம் கிடைக்கப்பெற்று இப்போது Dr. வை. கணபதி ஸ்தபதியிடம் உள்ளது. அதற்கு அவர் ஆய்வு நூலும் செய்துள்ளார். இவ்வேதத்தை பாகவதத்தில் வேதவியாசர் , "ஏக ஏவ புரா வேதஹ்ப்பிரணவஸ் சர்வ வாங்மயஹ தேவோ நாராயணோ நான்ய ஏகோக்னிக் வர்ண ஏவச" என்பார்கள். எங்ஙனம் உலகெங்கும் ஒரே அக்னியோ, உலகெங்கும் மக்கள் இனம் ஒன்றோ அதேபோல் ஆதியில் வேதமும் ஒன்றாகவே இருந்தது. அதுவே பிரணவ வேதம் ஆகும் என்பதாகும். இங்கே புராண நாயகனை வியாசர் சுட்டினாலும் வேதம் தந்த மயன் விஞ்ஞான நெறியாக சிவநெறியையே பரப்பியவன் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் வேதமாகிய பிரணவவேதத்தை வைத்துக்கொண்டே வியாசர் வடமொழியில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வேதங்களை வகுத்திருத்தல் வேண்டும் - ஆக்கி இருக்க வேண்டும். ஆதியில் தமிழின் தூய கூறுகளைக் கொண்ட பிரகிருதம் இலக்கணத்தால் ஆரிய வயப்பட்டு (கிரேக்கமொழியில் செல்வாக்கு) சமஸ்கிருதமாக மாறி ஆரிய மொழி போல் காட்சியளித்தது என்கிற ஆராய்ச்சியாளரும் உளர். அவற்றை

மெய்ப்பிப்பது போலவும் தமிழ் வேதம் உட்பட கலைநூல்கள் சமஸ்கிருதமயமாக்கப்பட்டது என்பதையும் விளக்கும் ஏதுக்களில் சில வருமாறு.

செந்தமிழ் ஓசையெல்லாம் சீர் கலை வடசொல்லாகி
செந்தமிழ் ஓசையெல்லாம் திருமொழி மறையென்றாகி
செந்தமிழ் ஓசையெல்லாம் மந்திரத்தன்மையாகி
அந்தமில் வடபுலத்து அருமறை விளம்பினரே

(சைவம் பாயனம் 788)

என்னும் திருமங்கயையாள்வார் திருநெடுந்தாண்டகத்தில் "செந்திறத் தமிழ் ஓசை வட (ல்) சொல்லாகி" என்றும் குறிப்பிடப்படுவது மனங்கொள்ளத்தக்கது.

நான்கு வேதங்களை வியாசர் வகுத்தாலும் யசுர்வேத எக்ஞமந்திரங்கள், ஸ்காந்தபுராணம், நாகரகாண்டம், லிங்க, பிரம சிவபுராணங்கள், சிற்பசாத்திரங்கள், விஸ்வப்பிரம்மபுராணம், மாந்தைப்பள்ளு போன்ற நூல்கள் வேதங்கள் 5 எனவே கூறும். ஆயினும் மயன் "வண்டமிழ் ஐம்மறை செம்மறை மும்மறை ஓம் எழுத்தியற் கலை ஒளி தரும் ஆற்றல் என ஐந்திறத்திலும் ஆகமநூலில்

ஆகம நெறியே அன்றோ ஐங்கலை யிலுங்காட்டும்
ஆகம நெறியே அன்றோ ஐம்மறை மூலங்காட்டும்
ஆகம நெறியே அன்றோ ஐம்மறை காலங்காட்டும்
ஆகம நெறியே அன்றோ ஐந்நெறி சீலங்காட்டும்

( ஆ. நூ 275)

என்றும் கூறுவதால் விளக்கமுறுகின்றது. பிரபஞ்சத்தின் செயல் நிலைக் கூறுகள் எல்லாம் ஐந்து இயல் கொண்டதாகவும் பிரபஞ்ச கர்த்தாவான ஐஞ்சிவன் இயல் - தொழில் ஐந்தைந்தாய் அமைவதால் வேதம் ஐந்து கவர் கொள்வதாகவே மயன் அமைத்தான் எனக் கருதமுடியும். உலகின் தோற்ற நிலைப்புக்குக் காரணமாக விளங்கும் ஓம் ஒளி, ஓம்ஒலி ஆகிய பிரணவ தத்துவத்தில் பீசாட்சரங்களாக அ+உ+ம் என்ற மும்மறை விளங்குவதையும் அவன் சுட்டிக் காட்டியுள்ளான்.

**ஆகமநூல்**

மயேந்திரமலையில் ஆகமநூலையும் அருளிச்செய்தான். இன்று பேசப்படும் 28 ஆகமங்கள் 17 உபாகமங்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துகைளயெல்லாம் கொண்ட மூலநூலே மயனது ஆகமநூல் என்பர். வைசம்பாயன ஆசிரியரும் மாணிக்கவாசகரும் ஒரே குரலில் மயேந்திரமாமலையிலேயே ஆகமம் விரித்துரைக்கப் பட்டது எனக் கூறுகின்றனர். மயனது ஆகமநெறியில் பூசைமுறைகள், முத்திரைகள், மந்திரங்கள் மட்டுமின்றி குமரிமாநிலத் தமிழர்கள் கண்ட உள்ளொளியால் விளைந்த ஆக்கை மாநெறியெனப் போற்றப்படும் ஒளியொளிர் கலை மூலமே விளக்கப்பட்டுள்ளது. என்பர் மாமுனிமயனே சைவநெறியில் சிவசின்னங்களில் தலையானதான திருநீற்றையும் ஆக்கியளித்து ( வெண்திருநீறு கண்ட வித்தகன் மயனே வாழி) அதனூடே ஆகமக்கலை ஒங்கிடுவதாகவும் சைவம்பாயனம் கூறாநிற்கும்.

**ஐஞ்சிவன் நெறி**

பிரணவவேதம், ஆகமநூல், ஐந்திறவிஞ்ஞானம், சூரிய சித்தாந்தம் (இன்று சமஸ்கிருதத்தில் உள்ள ASTRO PHYSIS AND ASTRO NAMY என போற்றப்படும் வானியல்நூல் மற்றும் கலைநூல்கள் மூலமாகவும் விஞ்ஞான நெறியாக. அருந்தமிழ் மொழியையும் ஐம்பெருங்கலைகளையும் ஐஞ்சிவன் நெறியையும் பரப்பியவன் மயன். பிரபஞ்சமூலகர்த்தா ஐஞ்சிவனே அவன் ஆற்றலே, காலமாவிசையே காலி - காளி . இக்காளியின் மூலவடிவே ஐம்முகதேவி. ஐஞ்சிவனின் மறுபதிப்பே ஆடலான் உரு (ஒளிநடராசன்) இவ் ஆடலான் தன் காலமாவிசையால் படைப்பு, அளிப்பு, அழிப்பு, மறைப்பு, துடைப்பு (அருளல்) ஆகியவற்றிக்கு காரணகரத்தன் என்பான். பிரபஞ்சகர்த்தாவானா சாதசிவனே விசுவகர்மன் - எனச் சாத்திர நூல்கள் இயம்புகின்றன. இதனை சிற்பம் மூலஸ்தம்பநிர்ணயம் "பிதாச் சர்வதேவானாம் சர்வலோக பிதமாமஹ சர்வலோ குரு சைவ விஸ்வகர்ம பரசிவஹ" எனக்கூறும் இவ்விருநிலைகளையும் ஐம்முகதேவன், ஐஞ்சிவன், ஐம்முகன், ஐம்முகதேவி என இன்புற்று அழைக்கின்றான் மயன். உலகில் ஐஞ்சிவனின் செயல் நிலைக்க மனு (இரும்பு). மயன்(மரம்). துவட்டா (உலோகம்), சிற்பி (கல்) விஞ்வெக்ஞன் (பொன்) ஆகியோர் ஐம்முகத்திலி பிறந்தவர்கள் எனத் தொன்மையான

(பஞ்சதசவிலோசனம்)

தமிழ்நூல்களும், யசுர்வேத எக்ஞமந்திரங்கள், புராண, இதிகாச, சிற்பநூல்கள் கூறுகின்றன.

இப்பரம்பொருளின் தியானசுலோகமாக கிருஷ்ண யசுர்வேதத்தில்

"பஞ்சவக்த்ரம் ஜடாபாரம் பஞ்சதச்விலோசனம்

சத்யாயோசாதம் ஸ்வேதம்.................. எனத்தொடங்கி

கோடிசூர்ய பிரதிகாசம் சர்வஜீவ தயாபரம்

தேத்வதேவம் மஹா தேத்வம விஸ்வம் பிரம்மம் ஜகத்குரும்

திரிலோம் சிருஷ்டி காத்தாராம் விஸ்வகர்மா நமோஸ்துதே! எனத்தோத்தரிக்கும் (மூவுலகிலும் படைப்பு முதல் ஐந்தொழிலின் மூலவர்) இங்கே கிழக்கு முகம் - சத்தியாயோசாதம் - ஆகாயம் - வெள்ளை, வாமதேவம்- தெற்கு முகம் காற்று - கருநீலம், அகோரம் - மேற்கு,முகம் தீ - செம்மை, தற்புருடம் - வடக்கு முகம் - நிலம் - மஞ்சள், ஈசானம் - வான்நோக்கியது - ஆழத்திலிருக்கும் நீரின் அம்சம் - பச்சை நிறம். இங்கு பத்து திருக்கரங்கள், சரீரம் ஹேம வர்ணகம் - சிவனீ தனக்கேயுரிய செம்மேனியெம்மான் - (சுட்டபொன்னிறம்) பிரபஞ்சகர்த்தாவின் வடிவம் பிரபஞ்ச வடிவாய் பிரபஞ்சம் எங்கு நிறைந்தாய் கலையும் எழிலும் அறிவும் நிறைந்தாய் கூறப்பட்டதையும் உற்றறிக. ( நெற்றிக்கண் உள்ளிட்ட 15 கண்கள். உடுக்கு, சூலம், சங்கு. சக்கரம், தாமரை, அட்சமாலை, வீணை, அம்பு, வில். நாகம். புலித்தோல்ப்போர்வை. பட்டுப்பிதாம்பரம், குண்டலினி சக்தி வடிவான பூணூல், உருத்திராட்சம், (வேறுநூல்களில் பிறைச்சந்திரன்) பரமசிவன் வடிவம் இவ்வாறு கூறப்பட்ட அவரின அருளல் தொழிலுக்கு மட்டுமுள்ள வடிவான சதாசிவ வடிவம் சற்று வித்தியாசப்படும்!

பிரபஞ்ச இயல்பையும் பிரபஞ்சமூலமும் முதல்வனுமான இச் சிவப்பரஞ்சுடரின் தோற்றதையும் அவற்றிலிருந்து கறந்தெடுத்த மொழியையும் கலைகளையும் உயர்கலைஞான நூல்களில் மயன் விபரித்ததை மயன் வரலாற்று நூலில்

ஐம்முகன் ஐந்தெழுத்தே ஐம்புலன் ஐம்பூதங்கள்

ஐம்முகன் தன்மைக்கேலும் ஐந்தியல் மொழியினாற்றல்

ஐம்முகன் புரியும் செய்கை அண்டமும் பிண்டமாக்கி

ஐம்முகன் அற்புதத்தால் அருங்கலை வளர்த்தானன்றே

(வை 20)

ஐம்முகம் புலனைக்கண்டும் ஐம்முகம் பொறியைக் கண்டும்
ஐம்முகம் பூதங்கண்டும் ஐம்முகம் இயலைக் கண்டும்
ஐம்முகம் மொழியைக் கண்டும் ஐம்முகம் சிற்பம் கண்டும்
ஐம்முகத் தொருவன் கண்ட அற்புதச் சிற்பமன்றே
(வை24)

ஐந்தொழில் செய்யும் தோற்றம் ஐமூலப் பொருளின் தோற்றம்
ஐங்கலைத் திருவின் தோற்றம் ஐயருள் சூட்சித் தோற்றம்
ஐஞ்சக்தி உருவத் தோற்றம் ஐஞ்சிவன் மூலத்தோற்றம்
ஐந்து நிலையின் மேலாய் அருளாட்சித் தோற்றம்தானே
(வை 604)

ஐம்முகத் தேவியாற்றல் ஐம்முகத் தேவன் ஆற்றல்
ஐம்முகக் கருணையாற்றல் ஐம்முக மந்திரவாற்றல்
ஐம்முகச் செயலினாற்றல் ஐம்முக கலையினாற்றல்
ஐம்முக விசுவகர்மன் இன்னருள் உரைக்குமன்றே

ஐந்தெழுத்து- அ, இ, உ, எ, ஒ,

ஐந்தியல் - மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம்

ஐயருள் - அருளொளி, தெருளொலி, பொருளொலி, இருலொளி, திருவொளி

ஐம்முகம் - சத்தியாயோசதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம்

ஐங்கலை - இயல், இசை, நடம், சிற்பம், பிரணவம்

ஐந்தொழில் - இரும்பு : மனுசிற்பி, மரம் : மயசிற்பி, உலோகம் : துவட்டசிற்பி, கல் : சிற்பி, பொன் : விஸ்வெக்ஞசிற்பி

ஐம்முகமொழியினாற்றல் - அமிழொலி, இமிழொலி, குமிழொலி, உமிழொலி, தமிழொலி

ஐம்முக செயலினாற்றல் - ஓசை, ஒலி, ஒளி, உரு, வடிவு

ஐம்மூலப் பொருள்-இரும்பு, பொன், உலோகம், வெள்ளி, செம்பு

ஐம்பொறி, ஐம்புலன், ஐம்பூதம் அறிந்ததே

ஐந்தொழில் - படைப்பு, அளிப்பு, அழிப்பு, மறைப்பு, துடைப்பு [அ...

**ஐங்கலை**

சிற்பமாக் கலைத்திறத்தால் செந்தமிழ் இயலே கண்டு
சிற்பாமக் கலைத்திறத்தால் செந்தமிழ் இசையே கண்டு
சிற்பாமக் கலைத்திறத்தால் செந்தமிழ் நடமுங்கண்டு
சிற்பாமக் கலைத்திறத்தால் பிரணவம் முழுதுமாய்வாய்
(மயனது அருள்மொழிநூல்) என்பதால்

பிரபஞ்ச சிருஷ்டி கர்த்தாவாகிய சிவனின் - சிருஷ்டியே பிரபஞ்சசிற்பம்

அதன் நளினமும் மூலமும் பிரணவ தத்துவமே. ஐங்கலைகளுக்கும் அதன் விரிவான எண்ணெண் கலைகளுக்கும் சிற்பமே தாயாகும்.

ஐம்முக தேவனாகவும் (மூலம்), ஐம்முகதேவியாகவும் (காலம் - காயத்திரி), இடமாகவும் (மாயை) விளங்கி இடம் - முதற்காரணம், காலம் - துணைக்காரணம், மூலம் - நிமிர்த்த காரணம் ஆகி உலகை சிருஷ்டிக்கும் ஆற்றலை (சைவசித்தாந்தம்) அம்மை அப்பர் வடிவாகவும், (அம்மையும் அப்பனும் சேயுமாய் திகழ் செம்மைத் திருநிலை ஆடலான் உரு ) சோமாஸ்கந்தராகவும் மயன் கண்டருளினான். விஸ்வப் பிரம்ம புராணம் விசுவகர்ம சிவனின் வேறு இருவடிவங்களாக வீரபத்திர சிவன், சரபேஸ்வரன் வடிவையும் சிலாகித்துப்பேசுகிறது. அப்போது காலமா சக்தியான தேவி பத்திரகாளியாகவும், (அதர்வண பத்திரகாளியாகவும்,) பிரத்தியங்கீரா எனவும் பேசப்படும். (அணு- சிவலிங்கவடிவம்)

**குமரிக் கண்டத்தில் நயினை நாகநாகேஸ்வரி (நாகபூசணி)**

நயினையில் காலமாக் கடவுளான உலகமுதல்வி (புவனேஸ்வரி) நாகர்களின யோகக் கலையின் சின்னமான ஐந்தலை நாகத்தின் கீழ் (குண்டலினி) அமர்ந்து அருள்பாலிக்கின்றாள். இவளை நாகர்களின் தலைவனான மயன், அவன் புதல்வி மண்டோத்ரி, அவள் மருமகன் இலங்கேஸ்வரான இராவணன், இராவனனின் தந்தை விஸ்சிரவசு என இராமாயணம் சுட்டும் தொழில் வல்ல துவீட்டா ஆகியோர் வழிபட்டனர் எனச் சொல்லப்படுகிறது. அன்னையின் மூலஸ்தான விக்கிரகமும் நாகப் பிரதிஷ்டையும் பதினான்காயிரம் வருடங்கட்கு முற்பட்டதென Dr. நரசிம்மன் ஸ்தபதி கூறுவதால் குமரிக்

கண்டத்தின் மறுபெயரான ஈழம் என்ற பெயரை இன்னும் தாங்கியுள்ள இலங்கைத் தீவில் குமரிபெருநாகரிக காலத்தில் இருந்த தலம் என்பது எம்மவர்க்கு உவப்பான செய்தியே. குமரியின் பருமனும் புகழும் போல் உயர்ந்ததோரு கோபுரம் கட்டப்பெற்று குடமுழுக்கு நடைபெறவுள்ளதை கலையாய்வின் கண்வைத்து போற்றி, உலக நாகரிகங்களின் தாய் நாகரிகம் மற்றும் தாய்மொழியின் உச்ச விஞ்ஞானத்திறனை மெச்சி அத் தாய்மொழியாம் எம் அமிழ்தினும் இனிய தாய்மொழியின் விஞ்ஞான, ஆன்மீகத் தன்மையை ஐந்திற விஞ்ஞானம் அறைவதை உங்கள் ஆழ்மனத்தில் பதிய வைத்து அவ்வரிய ஆய்வை முடிவுக்குக் கொண்டுவர முனைகின்றேன்.

**எல்லா நாகரிகத்திற்கும் எல்லா மொழிக்கும் மூலம்**

தமிழகத்தின் முழுமுதல் விஞ்ஞானியான மயனது முன்னோர்கள் நினைவுக்கு எட்டாத காலம் முதல் உலகநாகரிக வழிகாட்டிகளாக விளங்கினர்,

அசுவமாமுகத்து வண்ணல் அவனியில் தோன்றாமுன்னர்
விசுவபா ரதத்தினாற்றல் மேதினி விளங்குமுன்னர்
பசுபதி பாசங்கண்ட பக்குவர் தோன்றாமுன்னர்
விசுவமாக் கர்மளென்போன் வியன்கலை படைத்தானன்றே.

(வை 28) வைசம்பாயன

நூலாரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர்

தொழிலறிவாளர் சுருதிகண்ணாக
பழுதறியாத பரமகுரவோர்
வழியறிவார் நல்வழியறிவாளர்

அழிவறிவார் மற்றை அல்லாதாரே என்னும் பரம ஞானியான பட்டினத்தடிகள்

"திசைமுகனார் வருநாள் முன்வந்திடும் மாந்தைக் கண்ணானர் வகுத்ததல்லால் குருநாதன் ஆணை கண்டீர் பின்னேதிக் குவலையத்தே" என அறைவது அறிந்ததே, முன்குறித்த மக்கட்குழுவினரை தலைவர்களாகவும் குருமாராகவும் கொண்ட தமிழர்கள், மூத்த நாகரிக மக்கட்கெல்லாம் மூத்தவர்களாக விளங்கினர். இவற்றை கீழ்க்காணும் அம்சங்கள் உறுதி செய்து நிற்கும்

ஐந்திற விஞ்ஞானத்தை 1875இல் எதோவிதமாகப் பெற்று ஆய்வு செய்து பிரான்சுநாட்டு மொழியியலாளர் ஆன Dr. A. C. E பூரு (Burnell) On the Aindera School on Sanskirit Gramarians என்ற நூலில் தமிழும் சமஸ்கிருதமும் ஒன்றன்பின் ஒன்றாக ஐந்திறநூலை மூல நூலாகக் கொண்டு தமக்குரிய இலக்கணங்களை ஆக்கிக் கொண்டது என்றும் பல்மொழி இலக்கணங்களுக்கு மூலநூல் எனவும் கூறியுள்ளார். இதனை மெய்ப்பிப்பது போல் ஐந்திறம்

"தென் தமிழ் ஐந்தியல் பண்டுறும் மாத்தமிழ்
தென் றிசை எண்டிசை மூலமென்றோர்ந்தே
தென்மொழி வன்மொழி மூலா மன்றோந்தே
நன்மொழி உயிர்குல முதன்மொழி தமிழென
தென்றமிழ் ஓம்ஒளி ஓம் ஒலி அறிந்தோர்
நன்றுறும் உணர்வால் நவிலுவதியல்பே." (ஐந் 810)

பிரமிட்டுக்களை தென்னமெரிக்க, எகிப்திய, சீன நாகரிகங்களில் அமைத்துள்ளனர். ஆனால் அவற்றிற்கு மூலவிலக்கணங்களை எவரும் அறிந்திலர். இதன் மூல விலக்கணம் பத்தாயிரம் வருடங்கட்குமுன் குமரிக்கண்டத்தே தோன்றிய மயவிஸ்வகர் மாவினுடையதே என Dr. வை. கணபதி ஸ்தபதி தக்கசான்று காட்டுகின்றார். தென்னமெரிக்க மயன் நாகரிகத்தின் பிதாமகர் இம்மயனே என Dr. S. பத்மநாதன் (Mayan In kumari continent) விண்கரு நடுப்புள்ளியாக விளங்க புலமண்டலங்களாக (Energy Wave) அமைந்த தவளைமானநெறி (எண்ணென் பதம்) நடுப்புள்ளி ஒளி நூலாகக் கொண்டு முப்பரிமாணமாக பிரமிட்டுக்கள் அமைக்கப்படும் இப்பிரமிட்டு அடிப்படை விதியின் பிரகாரமே தஞ்சை பெருவுடையார் கோயில் தூபியும் அமைக்கப்பட்டுள்ளது. (கோபுரங்கள் அவ்வாறே)

இதன் இலக்கணத்தை பன்னிரு நூற்சாரத்தில் தெய்வக் கம்மியன்மயன்

"அடித்தளம் விரிந்ததாகி அவைமேலே குறுகிச்செல்ல
படித்தளம் போல் விளங்கும் படித்தளமாகி நின்று
குடித்தளம் அமைத்தலாலே குணநிலை வடிவேகண்டு
அடித்தள நிலைக்கே ஏற்றமுடித்தளம் அமையும் காண்பீர் (ப.ச 773)

முடித்தளக் குமையின் ஆட்சி படைத்தளத் தன்மைக்கீழே
விடித்தனமாகக் கண்டு கீழ்வரும் நிலையக்கண்டு
அடித்தளநுணுக்க மோர்ந்து படைத்தலால் உணர்வே ஓங்கி
நடைத்தளம் காண்டல் அன்றோ நலமுறும் சிற்பமென்றார்

(ப.நூ 174)

முடித்தள வுச்சியன்றோ மூலத்தை நன்குணர்த்தி
முழுமுதற்பொருளேயாக்கி முழுப்பொருள் நிறைந்த மாட்சியில்
முடித்தளம் வெளியில் தேக்கி, முடித்தளம் வளியால் ஆக்கி
முடித்தளம் ஒளியினைக் முயல்வதே சிற்பமென்றார்
என (ப.நூ 75) விளம்பியுள்ளார்

**தமிழ் என்பதில் விஞ்ஞான ஆன்மீகக் காட்சி**

தமிழை தன்னிகரில்லா மொழி, தமிழுக்கு இனிமை, அமிழ்து என்றும் பெயர் என்றே எல்லோரும் இயம்பிடுவர். அச்சொல் ஓர் விஞ்ஞானச் சொல் என எவரும் அறிந்திலர். ஆனால் ஐந்திறத் தேற்றம்

"அமிழொலி இமிழொலி குமிழொலி உமிழொலி
தமிழொலி ஒமியல் ஒங்குறும் செந்தமிழ் " எனக் கூறும் இதன் கருத்து மூளையூடாகஉள்ளத்தில் ஒளிப்புள்ளியில் அமிழ்ந்த உணர்வு பெற்று பின்னர் இமிழ்ந்து குமிழ்ந்து உமிழ்ந்து இறுதியாக தமிழ்ந்து தமிழாகின்றது என்கிறார் மயன். இது அணுசக்தி பிரப்பிட்டுகள் இன் 5 நிலை அலைகளாக ஒங்குகிறது என அறிஞர்கள் அகன்ற விளக்கம் தருகின்றனர். இதனால் தமிழை மூலமொழி இறைமொழி தெய்வத்தமிழ் (Davin Tamil) எனவும் இயம்புவர்.

"தமிழ்" என்ற சொல் பெயரா வினையா எனக்கேள்வி எழுப்பின் எவரும் பெயர்ச் சொல் என விடை பகர்வர். ஆனால் தமிழ் மரபில் எல்லாச் சொற்களும் வினைச் சொற்களாகத் தோன்றி வினையின் முடிவாய் வினையால் அணைந்த பெயராக (தொழிற்பெயர்) பெயர்ச்சொல்லாக வருவதை அறிவர்

"பொருண்மை சுட்டிய தெரிநிலை கிளவி
பொருளுறும் தொழிற்பெயர் நிலை நெறிநோக்கி

பொருள் மொழி நுட்பம் கலைத்தொழில் ஒட்பம்

தெருண்மை தோன்ற செப்புவதியல்பே (ஐந்திறம் 255)

இதிலிருந்து வினையின்றி, செயலும் பொருளும் உண்டாகா என உறுதியாகக் கூறலாம். இப்பிரபஞ்சமே இறைவன் செயலால் விளைந்ததே, அவ்விறைவனை உலகியற்றியான், விசுவகர்மன், விசுவகர்மப்பரமசிவன், சிவன் எனச் சொல்கிறோம், எல்லாம் வினையால் விளைந்த பொருட்களே விஞ்ஞானம் தரித்த உயிர்ப்பொருட்களே.

இவ்வாய்வின் ஒளிநூலாக இழையோடிய சீலத்தைத் தொகுத்து நோக்குகின்றபோது அருந்தமிழும் ஐம்பெருங்கலைகளும் அதன் விரிவான எண்ணெண் கலைகளும் வியனுலகை விரித்து வைத்த சிவநெறியின் (ஐஞ்சிவன் செய்கையை உணர்த்து நெறி) தத்துவமும் ஒரு நெறியை பிரபஞ்ச விஞ்ஞானநெறி வழிவந்த பெருநெறியே என்பது திண்ணமாகும்.

சுபம்

பிற்குறிப்பு : 1) "நுண்வினைக் கம்மியர் காணாமரபின மயன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்" சிலப்பதிகாரம்

2) "ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும் - மணிமேகலை

3) "The originator of all these anceint sciences is one known as mayasura" Formar chief engineer magastra Er. R.P. Karnic

உசாத்துணை நூல்கள்


1) ஐந்திறம் - பழந்தமிழ்ச் சிற்பிமயன்

2) வைசம்பாயனம் - சங்ககால சிற்பச் சித்தன் மயன் வரலாறு

3) விஸ்வப்பிரம்மபுராணம் - பூர்வகாண்டம்

4) நயினை மான்மீயம் அறிமுகம் - (பத்திரிகை) யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் திருமிகு. நவரத்தினம் அவர்கள்

5) நயினை நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தேர்வெள்ளோட்ட மலர்

6) சிலப்பதிகாரம்

7) தமிழகத் தனிப் பெருந் தலைநகர்

8) நவராத்திரி விரதமும் அதன் தத்துவமும்

9) விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை தெ.மு. தெய்வசிகமாணி ஆச்சாரியார் F.R.S.A (London)

10) திருவாசகம்

11) பௌதிக, இரசாயன, உயிரியல் சார்ந்த பாடநூல்கள், ஆய்வுக்கட்டுரைகள்

12) லெமூரியா அல்லது கடல் கொண்ட குமரிநாடு - பன்மொழிப்புலவர் க. அப்பாத்துரை

பிற்குறிப்பு

சிலப்பதிகார உரையில் கோவி மணிசேகரன் ஐந்நிறம் பற்றி பேசுகையில் "ஐந்திரம் எனும் செந்தமிழ் மந்திரம்" என்பர்

பிற்குறிப்பு (5)

தென்னமெரிக்க மயன் நாகரிகத்தின் பிதாமகன் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னர் குமரிக்கண்டத்தில் தோன்றிய மயன்தான் என Dr. S. பத்மநாபன் அவரது MAYAN IN KWNART CONTINENT என்ற நூலில் கூறியுள்ளார். இதே கருத்தை ANCIENT INDIAN TECHNOLOGY AS SEEN BY MAYA, THE GRADE ASURA என்ற நூலின் ஆசிரியர் R.R. KARANIK க்கும் கூறியுள்ளார்

2007-05-07

முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்த சிறிய கண்டம் என்று தெற்குக் கடல்களின் அடியில் ஆய்வுக்கப்பலான போலாஸ்டேன் (The olattern) கள் பிடித்தாக்க ஜேர்மானியரான அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக்கம் : விஸ்வப்பிரம்மஸ்ரீ . இரத்தினம் அச்சுதபாகன் B.A
ஆச்சாரியார்
அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு.
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
12 . 04 . 1926

விண்ணில்
23 . 10 . 2013

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
## வடிவேலு சண்முகலிங்கம் ஆச்சாரியார்

பாசத்தின் பிறப்பிடமே அன்பின் உறைவிடமே
சாந்தமான குணத்தின் இருப்பிடமே
சிரித்த முகத்துடன் எல்லோரையும்
கவர்ந்து வரவேற்பவரே
சிவ ஆட்மாக்களின் இரக்கம் உடையவரே
சுற்றத்தாரை உபசரிப்பவரே
செல்வச்செழிப்புடன் வாழ்ந்தவரே
வாழ வழி அமைத்த உத்தமரே
பொறுமையின் இலக்கணமே
உண்மையின் நண்பனே
உயிரின் உயிரே ஐயா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்தித்து, அன்னாரின் குடும்பத்தினருக்கு
எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

உம் பிரிவால் துயருறும்
சின்னர் கதிர்காமநாதன் (நாதன்) குடும்பம்

ஸ்ரீ கணேசன் அச்சகம், அச்சுவேலி. 077 7392935

## உயர்த்தும் பக்திக்கு துயரத்துக் கண்ணீர்



அமரர்
விஸ்வப்பிரம்மஸ்ரீ, திருவாளர்
**வடிவேலு சண்முகலிங்கம்**
ஆசாரியார்

எல்லை வேலிகள் இல்லாத காலம். சோதனைகள், வேதனைகள் எட்டிநின்ற காலம். சுற்றமோ பெற்றவரும் மதித்திட்ட பெரும் பணிசெய்த பிரபுகள் தலைதூக்காத காலம். மாலைகளை கொல்லாத சோலைக்காட்சி நாடகக் காலம். இந்த இனிமையான, இன்பமான, அமைதியான சூழலில், இரவும் பகலும் நம்மைத் தாலாட்டி கவலிக்கொள்ளும் பொழுதில்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா

எனும் ஓங்காரமும் சண்முகமும் ஆட்கொண்ட ஔவையின் பாடல், எங்கள் சண்முகலிங்கண்ணை நாவில் ஆலய வேறுபயில் ஒலிக்கும். அதனை மாலையினில் காற்று காவும். நம் செவியினுள் பாயும், மறந்திருக்கும் காலம் நினைவுவரும். இளமையதில் இப்பா எண்ணத்தில் பதிந்தது இவரது அன்றாட வழிபாடும் என்பதுதான் உண்மை.

இன்றுபோல் அன்று பலரும் நாடாதது காளியின் இருப்பிடம். அரவமில்லா அரவங்கள் ஊரும் ஆலையும் முலமும் பலர் அஞ்சினர். தள்ளிய நின்றனர். இக்காலங்களில் இராவரும்வேளைகளில் காளிக்கு எண்ணெய் விளக்கேற்றி, ஒளியூட்டி, தேவாரங்கள் ஓதி அவளை வழிபட்டவர்தான் இந்த எங்கள் சண்முகலிங்கண்ணை. இன்றுபோல் பணவிரயம் கண்டிராத அக்காலத்தில், எமைய பல குடும்பங்களைப்போன்று இவர்தம் குடும்பமும் இலட்சுமிதேவியின் அருளுக்கேங்கிய காலத்திலும், அவள் இருப்பிடம் தூய்மையாக்கி, ஒளியூட்டி, கிடைத்ததைப் படைத்து, தேவாரங்கள் பாடி, நெஞ்சார வழிபட்டார். அவளும் தன் உண்மைப் பக்தனை சோதித்துக்கொள்ள முற்பட்டாள். செல்வத்தைத் தந்தாள். மூத்த மைந்தனை இழந்தார், அகப்பிடித்த தன் மனைவியும் நோயினைக் கண்டார், எனினும் காளியின்பால் கொண்ட பக்தியும் அன்பும் இவருக்கு பெருகிக்கொண்டேயன்றி, கள்ளமும் தணியவில்லை.

அன்னை அபிராமியையே எந்நேரமும் எண்ணித்துதித்த சுப்பிரமணியருக்கு, இன்று மாலைக்குள் பூரணநிலவினைக் காட்டாவிட்டால் அரசதண்டனை என எச்சரித்துச் செல்கிறான் சரபோஜி மன்னன். பட்டரும் பதறவில்லை, கதறவில்லை. உன்னையே நம்பியும் எண்ணியுமிருந்த எனக்குக் கிடைத்திருக்கும் இந்தச் சோதனை, எனக்கல்ல உனக்கே எனக்கூறி, அன்னை அபிராமியிடமே தனக்கேற்பட்ட கதியினை ஒப்படைக்கின்றார். இறைஞ்சுகின்றார், பாடுகின்றார். அன்னை காட்சி கொடுக்கின்றாள். பூரணநிலவினை உதிக்கின்றாள், மன்னன் மன்னிப்புக் கேட்கின்றான், அவரை வணங்குகிறான்.

இதேபோன்று தெய்வங்களை ஒரு பார்வைப் பொருளாக்கும் இன்றைய காலங்களில், தன் உறுதியிலிருந்து மாறாத திருவாளர் சண்முகலிங்கம் அவர்கள், தனது எல்லாக் கவலைகளையும் அவளிடமே ஒப்படைத்தார். இடைவிடாது இறைஞ்சினார். தனக்கென ஒரு உண்மையான பக்தனை காளி கண்டுகொண்டாள். தனக்கு ஒளியூட்டியவருக்கு தன் ஒளிவெள்ளத்தைக் காட்டிக்கொள்ள முற்பட்டாள். அவரும் பிள்ளைகள் வாழ்வில் தன் பேரொளியைக் காட்டினாள். வேண்டிய விரும்பிய பொருள்தனை அளித்தாள். நோய்தனை விரட்டிக் காத்தாள். இறுதியில் தம்மடி அணைத்து, எங்கள் சண்முகலிங்கண்ணைக்கு ஒரு நற்பிறவிதனைக் கொடுத்தாள். அவரது மூச்சும் பேச்சும் அந்தப் பணிதரும் ஆலயமே வாழும். இந்தப் புனிதரின் புகழினைப் பாடும், முக் கனிதரும் சுவையினாய் இனிக்கும்.


*அருள்மிகு தமிழ்நெறித்தனர் அறுபாதும் நாள்தந்தனை*
*திருவான காளியின் துணைத்தாயே என்றனைன்*
*கருவான கருவுக்கும் குருவான என்அப்பனே*
*உருவான மனதிலே உணர்வாகி நிறுத்தினேனே*

அமரர் விஸ்வப்பிரம்மஸ்ரீ திருவாளர் **வடிவேலு சண்முகலிங்கம்** ஆச்சாரியார் மறைவினில் வாடித்துடிக்கும் அவர் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடைய, அவர் வணங்கிய அந்தக் காளியை வணங்குவோம்.


சண்முகலிங்கண்ணை மறைவில் துயரும் அனைத்து உள்ளங்கள் சார்பிலும்,
**ஸ்.சண்முகபாலன்**
இங்கிலாந்து. 24.10.2013




Harikanan (Pvt.) Ltd., jaffna.


BOC

# வம்சாவழி





* அமரர்களைக் குறிக்கும்

# நன்றிதனை மனமார நவில்கின்றோம்

"அன்பின் மூலமாகச் செய்யப்படும்
ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக்
கொண்டு வந்தே தீரும்"

எமது குடும்பத் தலைவன் இறையடியுற்ற வேளை தனில் எமை நாடி வந்து துயர் பகிர்ந்தர்வர்கள், இறுதிக் கிரியை களிலும், தகனக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்கள், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அன்பு உள்ளம் கொண்டவர்கள், மற்றும் எமக்கு பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியினைப் பகிர்கின்றோம்.



எங்கள் ஐயா நோய் வாய்ப்பட்டிருந்த இறுதித் தருணத்தில் உதவியாயிருந்த எங்களது அக்காவிற்கும் அத்தானுக்கும் வைத்திய சாலையிலும் வீட்டிலும் இவரை வந்து பார்வையிட்டு ஆறுதல் வார்த்தைகள் கூறிய எம் சொந்தங்களுக்கும் நன்றிதனை நவில்கின்றோம். வடமாகாண சபை கௌரவ விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அவர்கட்கும் நன்றி நவில்கின்றோம்.

இன்றைய இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்கள்" காளியின் மைந்தன்" என்ற இந்த சுவட்டினை உருவாக்க உறுதுணையாக எம்முடனிருந்த, உறவுகள், சிறப்புற வடிமைத்த கரிகணன் நிறுவனத்திற்கும் மற்றும் பல வழிகளில் எம்முடன் நின்ற அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிதனை இருகரம் கூப்பிச் செப்புகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

9.50
7 3 35
69.50

63
3
69

100.00
69.50
31.50

17
8

950
760
190

57
80
80
61
57
365

2500
250
350

950
250
700

190

950


700 = 5 | 190

190
5 | 950
5
45
45
00
0

190
.5
950


950
190
760

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—




Harikanan (Pvt.) Ltd., Jaffna.